# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance.*

௪. புத். சஞ். ௰௩.] ௲௮௱௪௰௪ ஹு. ஆடி ௴. ௰௧. தேதி வியாழக்கிழமை, Thursday, July 11, 1844. [Vol. IV. No. 13.


## வீரமாமுனிவர் செய்த ஞானவுணர்ச்சி.

### பதின்மூன்றாமுணர்த்துதல்.

நரகவேதனை காண்பிக்கின்றது.

செத்தவனுடைய தீர்வையான பின்பு அவனவன் செய்த பாவ புண்ணியத்துக்குத் தக்கது நரகமோட்சமென்கிற இரண்டு வழியில் ஒன்று நேரிடும். பாவியுடைய ஆத்துமம் உடலை விட்டுப் பிரிந்தவுடனே நரக பாதாளத்திலே விழும். எத்தனை நாழிகை எம்மாத்திரநேரஞ் செல்லுமென்று யோசிக்கவேண்டியதில்லை. கண்சிமிட்டிவிழிக்குமுதலே சம்பவிக்கும். ஒரு மனிதனை மலைப்பாம்பு வந்து பிடித்துக்கொள்ளக் கிட்ட நின்றவர்களெல்லாங் கைவிட்டோடிப் போக அவனுக்கொரு உதவியுமில்லாதிருக்க அந்தப் பாம்பு அவனைத் தன் வளைக்குள்ளே இழுத்துக்கொண்டு போகிறபோது எப்படி நடுநடுங்குவான். என்னவாய்த் துடித்துப் பதைத்து ஏங்கித் தடுமாறுவான். அதை இவ்வளவென்று சொல்லக்கூடுமோ? அப்படியே பாவியானவன் ஒருதவியுமில்லாமல் சென்மப்பகையாளியான பசாசின் கையிலே ஒப்புக்கொடுக்கப்படுகிறபோது அவனுக்குள்ள துக்கமும் பயமும் நடுநடுக்கமும் இம்மாத்திரமென்று ஆராலே சொல்லக்கூடும்.

பாவியானவன் தானிருந்த விஸ்தார மனையை விட்டு அந்தகாரக்குழியிலே விழுந்ததைக் கண்டு பிரமித்துப்போய்ப் பெருமூச்சுவிட்டழுது ஐயையோ! எங்கேயிருந்து எங்கே வந்தேன். என்னோடுகூடவிருந்த உற்றார் பெற்றார் சேர்ந்தார் சிநேகித்தாரெங்கே? ஒருவரையுங் காணேனேயென்றலறிப் பதறிப் புலம்புவான். எங்கே பார்த்தாலும் அவலட்சணப் பசாசுக் கோலமாய் நாலுதிக்குஞ் சுற்றி வளைத்துக்கொண்டு கத்தி ஈட்டி குறடு சங்கிலி சாட்டை சம்மட்டி முதலான ஆயுத எத்தனங்களை எடுத்துக்கொண்டு அவனைத் தலையான பசாசின் முன்னே கொண்டு போய்விட்டு இவனுக்கு ஆக்கினை சொல்லுமென்று கேட்க இவனை உலகத்திலே முடிதரித்துக் கொடூரமாய் இராச்சியம்பண்ணினதுக்கு அந்த வகையிலே ஆக்கினையிடுங்களென்று தலையான பசாசு சொல்ல மகா உக்கிரமாய் எரிகிற சிங்காசனத்தில் வைத்து மழுப்போலே காய்ந்திருக்கிற இருப்பு முடியும் செங்கோலும் அவன் கையிலேயும் சிரசிலேயும் பசாசுகள் தரிக்கப்பண்ணி அவனலறுகிற சத்தங் கேட்டு ஏன் கூப்பிடுகிறாய் இதோ உன் குடியானவர்களாகிய நாங்கள் இருக்கிறோமென்று எண்ணிக்கையில்லாத பசாசுகள் கூடி அவனைக் கீழ்விழுத்தாட்டி மேல்விழுந்தேறி உதைத்து மிதித்து உலகத்திலே பாராட்டின இராசமகிமையினருமை இப்போது தெரியுமென்று நானாவிதமாகப் பங்கப்படுத்தும். இதல்லாமல் முன்னே அவனால் அநியாயமாய்க் கொலையுண்ட உயிர்ப்பிராணிகள்வதை அவனுடைய உயிரை அறுக்கிறதாகவும் அநியாயமாய்த் தண்டமிறுத்த குடிகள்வதை அவனிருதயத்திலே புகுந்து குடலீரல்களைப் பிடுங்கிறதாகவுங் காணப்படும். பொய்யான மதங்களைப் படிப்பித்து நாடு தேசமெல்லாஞ் சுற்றித் திரிந்த கள்ளக் குருக்கள் கள்ள ஞானிகளெல்லாரும் தங்களாற் கெட்டுப்போன சனங்களாலே சவுக்கடிபட்டு ஏனிப்படி எங்களைக் கெடுத்தீர்களென்கிற முறைப்பாடு கேட்பார்கள். பெண்சாதியும் புருஷனுந் தங்களுக்குள்ளே ஒருவர்மேலொருவர் இசலாட்டமாய் நாய்களைப் போலே கடித்துக்கொண்டு தூஷணித்துக்கொள்ளுவார்கள். செல்வமிகுந்து தொந்தி பெருத்தவர்கள் அக்கினிக் குறடுகளால் மாங்கிஷம் பிடுங்கப்படுவார்கள். லாகிரி வெறிகொண்டு திரிந்தவர்களுக்குப் பஞ்சலோகத்தைத் தண்ணீராக உருக்கிக் குடிக்கக் கொடுப்பார்கள். சந்தனம் புழுகு சவாது கந்தப்பொடி பூசிப் பாவத்திலே பழகினவர்களை மகாநரகலாயிருக்கிறதுர்க்கந்த ஆற்றிலே போட்டு அமிழ்த்துவார்கள். மோக பாவத்திலே பழகினவர்களைக் கொடூரமாய் எரிகிற நெருப்புக் கட்டிலின் மேல் வளர்த்திச் சர்வாங்கமுமூடுருவிப் பாய்ந்து கடிக்கிற அக்கினி மயமான விஷசர்ப்பத்தோடும் புழுத்து நாறித் துர்க்கந்தம் வீசுகிற செத்த பிணத்தோடுஞ் சேர்த்துப் பிணையலாடிவிடுவார்கள். கண் காதிக்கின்பமாய் ஆடல் பாடல் சரசஞ் சிரிப்பு விளையாட்டு வேடிக்கை விநோதங்களிலே பழகினவர்களைப் பேய்கள் பயங்கரமான உருவத்தோடுங் கொடுமையோடும் முகக்கோரணி காட்டிப் பரியாசம்பண்ணித் தூஷித்து நிந்தித்துப் பொறுத்து முடியாத வாதைப்படுத்தும். இப்படி அவனவன் எந்தெந்தப் பாவங்களைச் செய்தானோ என்ன நினைவு நினைத்தானோ எந்த வார்த்தை பேசி எந்தக் கிரியையாய் நடந்தானோ அததுக்குத் தக்க ஆக்கினை மூச்சு விட நேரமில்லாமல் அனுபவிப்பான். அங்கே நிற்கிறதும் வாதை இருக்கிறதும் வாதை; பேசுகிறதுங் கேட்கிறதும் நடக்கிறதுஞ் சகலமும் வாதையேயல்லாமற் சுகமானதொன்றும் இல்லை.

ஆகையால் தர்க்க சாஸ்திரம் படித்திருந்த ஒரு சீஷன் செத்து நரகத்திலே விழுந்த பின்பு தன் குருவுக்குத் தோன்றின விடத்திலே நரகத்திலேயும் படிக்கிற கல்வி சாஸ்திரங்களுண்டோ என்று குரு கேட்டதற்கு இந்தக் கல்வியும் தர்க்கமுமுண்டென்றான். அதாவது, நோவில்லாதது ஏதாகிலும் உண்டோ என்று கேட்கிறதும் இல்லையென்றுத்தரஞ் சொல்லுகிறதும் உன்னுடைய வாதை பெரியதோ என்னுடைய வாதை பெரியதோயென்றொருவருக்கொருவர் தோர்வைப்படாமல் தர்க்கிக்கிறதும் இதுவே கல்வியுஞ் சாஸ்திரமுமல்லாமல் வேறொன்றும் இல்லையென்று சீஷன் சொன்னான். இப்படிப்பட்ட வாதையுள்ள ஸ்தலத்திலே பாவி சேர்ந்தவுடனே உலையிலே வேகிற இரும்பைப் போலே வெந்து அடை கல்லின் மேலே வைத்துச் சம்மட்டியால் அடிக்கிற அடிகளைப் பாவிகள் பொறுக்கமாட்டாமல் ஆகாய மட்டுங் கேட்க அபய சத்தமாய் வீரிட்டுப் பெரு மூச்சு விட்டு ஐயையோ! இந்த வாதைகள் அனுபவிக்க ஏன் வந்தேன் முன்னே அறிந்தேனில்லையே. இப்போதல்லோ மெய்யென்றறிந்தேன். வேத சத்தியங்களை வாசித்தவிடத்திலேயும் குருக்கள் சொல்லுகிற பிரசங்கங் கேட்டவிடத்திலேயும் பயப்படவில்லை. உலகத்திலே கெட்ட சுகங்களை விடாதபடிக்கு வேத மொழி தட்டினேன். முன்னே அனுபவித்த சுக போகமெல்லாம் இப்பொழுது என்னவாய்ப் போயிற்று. விஸ்தாரமாய்ச் சம்பாதித்த காணி பூமிகள் எல்லாம் எங்கே. நரகமே இருப்பாயிற்று சந்தோஷமாய்க் குடியிருக்கக் கட்டின மாட மாளிகை வீடு வாசல் எங்கே. இருட்டுக்குழியாயிற்று. மகிமையோடே ஆண்ட தலைமைகள் போய் அடிமைத்தனமாயிற்று. ஒரு காசும் பிச்சை கொடாமல் தேடி வைத்த திரவியங்கள் எல்லாம் என்னை அதிகமாய் வாதிக்கிற நெருப்பாயுதங்களாய் இருக்கின்றன. ஐயையோ! இப்படி வருமென்று சற்றேயாயினும் நினைக்கவில்லையே. ஒரு நாட் பசி பொறுத்து ஒரு சந்தி உபவாசமாய் இருக்க மாட்டேனென்று மீறினேன். இப்போது எந் நாளும் ஆறுத பசியால் தவித்துத் துடிக்கிறேனே. ஒரு அற்ப நோவு சரீரத்தில் வரப்போகிறதென்று மகா எச்சரிக்கையாய் இருந்தேனே. இப்போது வாதை மேல் வாதை அனுபவிக்கிறேன். இந்த மூடத்தனம் ஏன்பண்ணிக்கொண்டேன். சகல செல்வ பாக்கியம் நிறைந்த மோட்ச இராச்சியம் எனக்குச் சர்வேசுரன் நியமித்தவிடத்திலே பூலோக அற்ப சுகத்தை விடாதபடிக்கு மூர்க்கமாய் இருந்து அந்தச் சுகத்தையுமிழந்து அளவில்லாத பரலோக பாக்கியத்தையும் இழந்து இந்த அக்கினிச் சமுத்திரத்தில் விழுந்தேன். இனி என்ன செய்வேன். மறுபடி உலகத்திலே போய்த் தவசுபண்ணிக்கொள்ளென்கிற உத்தரவே இருந்தால் எப்படிப்பட்ட கடினமான தவசுகளைப் பண்ணுவேன். எத்தனை நாள் ஒரு சந்தி உபவாசமாய் இருப்பேன். என்னுடைய ஆஸ்திபாஸ்தி எல்லாம் ஒரு காசும் வையாமல் பிச்சைதான தன்மத்திலே செலவழித்துப்போடுவேன். ஆங்காரத்தை அடக்கி எத்தனை நீசருக்குங் கீழ்ப்படிந்துபோவேன். சுக செல்வங்களை ஒருக்காலும் நினையாமல் குப்பை மேலேயிருந்து தவசுபண்ணுவேன். ஆனாற் கூடாத காரியத்தை நினைத்து என்ன பிரயோசனம். காலங் கடந்துபோயிற்று. நானனுசரித்துக்கொண்ட மதிகேட்டுக்குச் சரியான மதிகேடுண்டோ? இத்தனை கஸ்திவாதைகளெல்லாம் பட்டாலும் இனிமேல் அப்புறம் போக இடங் கிடைக்குமோ? ஆயிரம் வருஷம் கோடி வருஷ

த்துக்குப் பிறகாகிலும் யாதொரு ஆறுதலுங் கிடைக்குமோ? கிடையாது. எண்ணுகிற இலக்கங்களெல்லாமுடிந்தாலும் ஆக்கினைப்படுகிற நாள் முடியாதே. நான் செய்த குற்றங்களுக்காக அழுகிற கண்ணீர் சமுத்திரம் போலே நிறைந்தாலும் நரக அக்கினி குறையுமோ? சற்றாகிலுங் குறையாதே. அந்த ஆக்கினை அனுபவியாதபடிக்கு உயிரைப் போக்கிக்கொள்ளவேண்டுமென்றாலுங் கூடாது. அவலட்சணங்களைக் கண்ணாலே காணாமலும் பயங்கரமான சத்தங்களைக் காதினாலே கேளாமலுமிருக்கவேண்டுமென்றால் கண்ணுங் காதுமதிகமாய்த் திறந்து வழிவிடுகிறதல்லாமல் மூடி அடைபட்டிருக்கமாட்டாது. சகலமும் ஒய்வில்லாமலும் முடிவில்லாமலும்படவேண்டியிருக்கிறபடியினாலே இந்த ஆக்கினை ஒருக்காலும் முடியமாட்டாதேயென்று பெருமூச்சு விட்டுப் பல்லைநெறநெறெனக் கடித்து அழுது பிரலாபிக்கிறதல்லாமல் வேறே நம்பிக்கையில்லை.

பாவீ உன் பாவத்துக்கு இப்படிப்பட்ட கஸ்திகள் வர இருக்கிறதைக் கண்டு இன்னம் பாவத்தை விடாமல் இருக்கிறாயோ? இரு கரையும்புரண்டுபெரு வெள்ளமோடிவரச்செய்தேயின்னம் ஆற்றங் கரையில் நித்திரைகொள்ளுகிறதென்ன? நரகத்தைக் காணுதலினாலே நம்பிக்கையில்லையென்றால் நரகத்திலே இருந்து வந்த மனிதனுடைய அத்தாட்சியைச் சொல்லிக் காண்பிக்கிறேன் பார். ஒரு வாலிபன் சேவகத்திலே வீரசூரனாய்க் காமாதுரனாய் வேதவாக்கியமுங் குரு மொழியுஞ் சட்டை பண்ணாமற்றிரிந்து செத்த பின்பு நரகத்திலே விழுந்து தான் அனுபவித்த செல்வங்களுக்குப் படுகிற வாதைகளை ஒரு புண்ணியவானுக்குக் காண்பித்ததாவது அவனாத்துமம் உடலை விட்டுப் பிரிந்து நரகக் குழியிலே விழுகிற போது ஒரு பெரிய தலைவனுக்குச் செய்கிற வெகுமானங் கொண்டாட்டம் போலே பசாசுக்கள் கூட்டங்கூடி அவனிற்பாக்கியத்தைப் பற்றித் துஷ்ட சந்தோஷக்குறிகளுடன் குதித்து எதிர்கொண்டுவந்து பயங்கரமான விரைச்சலோடே மங்களம்பாடிப் படைத்தலைவன் வருகிறான் ஆசாரம் பண்ணுங்களென்று பரியாசமாய்ச்சொல்லிக் கூட்டிக்கொண்டுபோய்த் தலையான பசாசுக்குக் காண்பித்தவிடத்திலே அந்தப் பசாசு நெருப்பான தன் கரங்களால் அவனைக் கட்டிமினவி மற்றப் பசாசுகளையும் அவ்விதமாய்க் கட்டிமினவச்சொல்லி அவனுக்கு ஸ்நானம் பண்ணுவித்து மற்றவரிசைகளையுஞ் செய்யுங்களென்று சொல்ல அக்கினிநிறைந்த குளத்திலே கொண்டுபோய்க் குளிப்பாட்டி ஒரு நெருப்புக் கட்டிலிலே கொண்டுபோய் வளர்த்தி அவனோடே படுத்திருக்க ஸ்திரிக்குப்பதிலாய்க் கொடூரமாய்க்கடிக்கிற அக்கினி விஷ சர்ப்பத்தை வளர்த்திப் பிற்பாடு அவனுக்கு விருந்தாகப் புழுக்களைக் கொண்டுவந்து சாப்பாடிட்டு உருகி நீரானமாயிருக்கிற நெருப்பைப் பானமாகக் குடிக்கக்கொடுத்துப் பேய்கள் அவனுடைய வேதனையைப்பார்த்து ஆடிப் பாடிக் கொண்டாடின. அவன் ஒன்றும்பேசாமற் பெருமூச்சுவிட்டு இனிமேலென்னசெய்யப் போகிறேனென்று பெற்றதாய் தகப்பனும் உற்றார் உறவின்முறையாரும் சேர்ந்தார் சிநேகிதரும் தன் பெண்சாதியும் தனக்கு உதவியாயிருந்த பரலோக பூலோகவஸ்துக்களும் தர்மாத்துமாக்களும் இனித் தனக்கு உதவமாட்டார்களென்று உக்கிரம எரிச்சலோடே அவர்களையுந் தான்பிறந்த நாளையும் வெகுவாய் நிந்தித்துச் சபித்துத் தூஷணித்து மறைந்துபொனான். அப்படிப்பட்ட வாதைகள் அவனுக்கு வந்தபோதே உனக்கும் அப்படி வராதென்று நினைக்கக்கூடுமோ? அடுத்தவீட்டிலே பற்றினநெருப்பைக் கண்டு பயமில்லாமல் இன்னமுன்வீட்டிலே நித்திரை போகிறதென்ன? பாவமயக்கத்தை விட்டு விழித்துக்கொள். நரகாக்கினையை நினைத்துப்பார். நல்லகருத்தோடே புண்ணிய வழியை யனுசரிக்கிறேனென்று கெட்டியான பிரதிக்கினைசெய்து உன் பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டுப் பிரார்த்தித்துக்கொள்.

தயாதிகமனஸ்தாபஞ்சொல்லவும்,
பதின்மூன்றாமுணர்த்துதன் முற்றுப்பெற்றது.

---

குறள்—௰. அதிகாரம்.

இனியவைகூறல்—*On sweetness of speech.*

௯௭. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற்றலைப்பிரியாச்சொல்.

பு. ஒருவனுக்கு இம்மைக்கு நீதியையும் உண்டாக்கி மறுமைக்கறத்தையுந் தரும்பொருளாற் பிறர்க்கு நன்மையாகிய பிரயோசனத்தைத்தந்து இனிமையாகிய குணத்திலேநின்றும் நீங்காதசொல், எ—று.

That speech which, while imparting blessings, ceases not to please, will yield righteousness (for this world) and merit (for the next world ) *Drew.*

---

௯௮. சிறுமையுணீங்கிய வின்சொன்மறுமையு
மிம்மையுமின்பந்தரும்.

பு. பொருளாற் பிறர்க்குச் செய்யுந் துன்பப்பிரயோசனத்திலே நின்று நீங்கிய இனியசொல்லானது ஒருவனுக்கு இம்மைமறுமையென்கிற இருமையிலு மின்பத்தைத்தரும், எ—று.

Sweet speech, free from meanness, will give pleasure both in this world and the next. *Drew.*

---

பேரின்பக்காதல்—திருச்சபை வாழி.

வாழித்திருச்சபையும் மங்காதசத்தியமும்
ஆழிவளையு மவனிதனிலேவாழி
சற்குருக்கள்மெய்ஞ்ஞானச் சாஸ்திரிகளெச்சபையும்
பொற்புறையும்வேதப் புரோகிதரெல்லாம்வாழி
வாலர்விருத்தர் மடமாதர்கன்னியர்கள்
சாலத்துறந்த தவசிகளெல்லாம்வாழி
மெய்ச்சபையிலுள்ள விசுவாசிகள்யாவும்
அச்சமறவிந்த வவனிதனிலேவாழி
பஞ்சம்படைநோய்கள் பாருலகில் வாராமல்
நெஞ்சிற்கவலையற்று நீடூழிவாழியதே
சிந்தாகுலமிருந்த தேவன் மேற்பத்திகொண்ட
அந்தோனிக்குட்டியென்னுமண்ணாவி பாடியதே.
பேரின்பக்காதல் நிறைந்தது.

---

பஞ்சதந்திரக் கதை.

( Concluded from page 115.)

தண்டகாரணியத்திற் சஞ்சரிப்போனாகிய சண்டகருமனென்னுமோரிராக்கதத்தலைவன் அவனேறிட்டவோரந்தணனோறுண்மேலே நிடத்திக்கொண்டு போவுழி அவ்வேதியன் அவ்வரக்கனடிகண்மிக மெல்லியவாயிருப்பனவற்றைப் பார்த்து, ஐய வரக்கத்தலைவவுன் காலடிகள் எப்படி மெலியவாயினவென வரக்கனானீராடியீரம்புலரளவு நிலன்மீது செல்லேனெனக்கேட்டுச் சிறிதாறுமுன்னே தாங்கிப்போய்ப் பிறகிராக்கதனோர்குளனின் மூழ்கப் புக்குழி பார்ப்பானைப் பார்த்தியானித்த கருமஞ்செய்துவருகாறு நீயடிபெயராற்கவிங்குத்தானே நிற்றியெனச்சொல்லிப் பின்னர்நானஞ்செய்தனனந்தணனிதைப் பார்த்திவன் மூழ்கிப் புறம்போந்தானும் இவன் வயிற்றழலின் மூழ்காதிரேமாகலானோடியுய்ய விதுவே நல்லவமயம். நீராடிக் காற்புலரு முன்னிவனடவானல்லோவென்று தனக்குட்டெரிந்துகொண்டு விரைந்தோடினான். அதுகண்டவுணன்யான்வாய்பதறிக் கைக்கெட்டினது வாய்க்கெட்டாமவிழப்புற்றேன் கடிதிற் பிற்சென்று கவர்வேமெனினுங் கொண்டநோன்பு குறையுறுகின்றதென்று மறுக்கமுற்றாங்கே நெட்டுயிர்த்துவாளாநின்றனன். ஆகலான் யாதுமுய்த்துணராதியற்றலாகாதெனச் சொல்லிப் பின்னர் பன்னூல்களையுநன்காய்ந்து கடைப்பிடித்திம்மூம்மூலையரிவையைப் பார்க்கவொண்ணாதென்னையோவெனின் விரூபமகவுளதாயினதைக்காணலாகாதென்பது நூற்றுணிபாமற்றும் ஃ தான்றோரொழுக்கமுமாமென வேந்தலம்மொழியுட்கொண்டக்கன்னியை வேற்றூழிவைத்தளித்தபின்னரவள் பூத்தமையானிவண்மணத்திற்கியைபவனுக்குப்பெரும்பொருட்குவை தருவலெனத்தேயந்தோறு மணவோலைபோக்கினமையைக் கேட்டவிரந்துண்ணுமண்டையராகிய வோர்குருடனுங் கூனனும் விவாசவிருப்பான் மன்னன்பாற்புக்கனர். அவருட்குருடனரையனைநோக்கி நுங்கன்னிகையை எமக்குத் தரிற்கொடுமெனவிறைவனிச் சுவயம்வரற்கு நங்கன்னிகையைக் கடிபுரிவது தக்கதென்றுள்ளி அவனுக்குமகட்கொடை

நேர்ந்தங்ஙனமே கடிமுடித்தளவிற் பொருடந்து நீகணமு நீட்டியாமற் பரதேயம்போதியென்றனன். அவ்விடைகொண்டு மூவரும்பரதேயம்புக்கிருப்புழியவாக்கூனற்குவயமாயவனைநோக்கி யிக்குருட்டுச்சவத்தைநஞ்சிட்டுக்கொல்லினுமிடையூறின்றியின்புநுகர்வோமெனக்கேட்டவன் செத்தபாம்பொன்றைத்தந்தனன் அவ்வணங்கதை யேற்றுக் கண்டித்தடுப்பின்மேல் வேவவைத்துப் பொறியிலியையித் தசைநிற்குறித்துக் கொணர்ந்தேனிச்சுல்லி எரித்துக்கொண்டிரு நான் வேறுகருமத்திற் புகுகின்றேனென வக்கண்ணறையவ்வாறே யிளந்தழலா வெரித்துக்கொண்டிருப்புழியக் கிருட்டினன் சருப்பவாவி கண்ணிற்றாக்கி யவ்விடத்தினாற் கண்ணிரோகந் தீர்ந்து முன்போற் கண்டெரிந்தமையா விவரிருவரும் இவன் குருட்டுதவியானகைத்து விளையாட்டயர்வதைக் கண்டு காலானெறிகாணும்பண்டை மாட்சிபோலவந்து கூனனைப்பற்றியீர்த்துச் சீற்றத்தாற்றூக்கி அவன் மார்பிலெற்றினவளவிலவண்மூன்றாமுலையமிழ்ந்திக் கூனன் கூனுகிமிர்ந்தது. ஆதலாற்றெய்வவொற்றுமையிருந்தால்யாவு நல்லவாமெனச் சக்கிரதரனல்லது நீ யுனகேகத்துக்கே குழிவழித் துணையோடேகு. ஊர் வழிதனித்துச்சேறலுமெல்லோரு முறங்குகையில் விழித்திருக்கையுந் தலையாய பொருளுமின்பமுந் தனக்கே யுளவாகுகவென்னும் விருப்புறவு மொழியற் பாலனவென நூலறைகின்றன. இங்ஙன நானெறிகடவா வொழுக்கினன் புயங்கத்தினின்று மோர்வேதியனுய்ந்தவண்ணமுய்வானெனச் சுவர்ணசித்தியப்பனவனுயலெவ்வாறு நிகழ்ந்ததெனச் சக்கிரி சொல்வானாயினான்.

நாசிகதேயத்தனாகிய தத்தனென்பனன்னையைநோக்கி யானரியன்கருமத்தாலோரூர்க்குப் போகுவல்லவிடைதருதியென வவ்வீன்றாள் குழந்தையொருவனுயே கற்கவெனக் கேட்டவன்றாயே நெறியூறின்றி யிருக்கின்றதே யெனவவண்மீண்டுமப்பனே யெஃதுளதாயினு நீ நெறித்துணையினிச்சேறலாகாதென்றுகூபத்திலோர் நண்டைப்பற்றி யோர்கலயத்திற் பெய்து கொடுத்திதையேனுந் துணைக்கொடும்பாதென வவ்வாறேயாய் மொழிமேற்கொண்டேகுழிநெறியில் வேனிலால்வேசுற்றோர் தருநிழலிற் கண்வளராநிற்குமிடத்தி யாண்டிருந்தோவவற்றீண்டவந்த வேராவிம் மட்கலயத்திற்பெய்திருப்பதென்னென்றதனுட்டலை நீட்டுகையிலஞ்ஞெண்டிஃதோர் காரரவென்றுணர்வுற்றுக் கொடுக்காலிடுக்கிக்கொன்றது. பின்னரந்தணன் விழித்திப்பணியைப்பார்த்திஃதெங்ஙனமிறந்ததெனச் சூழ்வுழியதன்சென்னியை யலவன் கத்தரிக்கக் கண்டித்துணைச்செயலுமிதுவ்வபுரிந்தது மாதாதந்த வழித்துணையாற் பிழைத்தேன் தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லையென்றது பொய்யாதென்றந்நண்டைக் கைக்கொடில்லம்புக்கன்னைக் கட்டாங்க நிலந்தோய வீழ்ந்து பணிவுதோன்றத்தழுதழுத்து வாழ்த்தி நிகழ்ந்தசெய்திகளை விளம்பி யின்புற்றிருந்தனலெனப் பொன்வாய்ப்பினனிதுதக்கதேயாமேனனில், மந்திரந் தீர்த்தம் பெரியோர் சோதிடன் மருத்துவன் குருவின்னோர் பாலெவனெவ்வணம்பாவனைபுரிவானோ வவனவ்வணம் பேறுபெறுவனென் றிங்ஙன நேமியானைத் தேற்றித் தலைக்கேகினன்.

அசம்பிரேட்சியகாரித்வம் அல்லது ஆராயாதுசெயலென்
னுமைந்தாந்தந்திரமுற்றிற்று. இங்ஙனஞ்சோமசு
ருமனென்போனரசன் மக்கட்குரைத்த
பஞ்சதந்திரநிறைந்தது.

---

## ஞானக்கும்மி.

[Satirical Poem on the superstitions of the Hindus.]

### ௰௩. சாதிகள் கலியாணப்பேதகம்

௪௯. மாமாங்கம்வர ஆறுமாதமு
மாமாங்கம் பிறகாறுமாதமும்
ஏமாந்து கலியாணம் வந்ததை
யேன் விட்டுவிட்டாய் ஞானப்பெண்ணே.

௫௰. ஆடிமாதங் கலியாணஞ்செய்ய
லாகாதென்று விலக்கிவைக்கும்
வேடிக்கைக்கார ரெண்டகச்சாதிக்கு
வேதமேனடி ஞானப்பெண்ணே.

௫௧. ஆடிமாதம் வருகுதென்று பயந்
தையருக்கில்லாத பொய்யைச்சொல்லிக்
கூடிநீமணஞ் செய்துகொண்டாலுமுன்
குற்றந்திருமோ ஞானப்பெண்ணே.

௫௨. மூன்றுஓலையையொன்றுக்கியந்த
முந்தினஓலையையெண்டக்கி
யூனறிநீமணஞ் செய்யுமவசர
முண்டானதென்னடி ஞானப்பெண்ணே.

௫௩. அவசரத்தினால் மந்திரங்கற்கா
தாயித்தத்திவிருக்காம
லவசரத்தில்நீ தீட்சைபெற்றதிங்
காருட்கட்டளை ஞானப்பெண்ணே.

௫௪. ஆடிமாதத்தையவசரமோ அவ
பத்தியால்வந்த அவசரமோ
தேடிக்கொண்ட அவசரமோ அதைத்
திட்டமாய்ச்சொல்லடி ஞானப்பெண்ணே.

௫௫. ஆடிக்கஞ்சு மவசரத்தோர்களுக்
காயத்தமொன்றும் வகுத்துமுன்னே
தேடித்தீட்சை கொடுத்து விவாகமுஞ்
செய்துவைத்தாயல்லோ ஞானப்பெண்ணே.

௫௬. ஆடிமாதம் பொல்லாப்புச் செய்தாலதற்
கப்பால்மாதங்கள் நன்மைசெய்தாற்
கூடிவேறொரு தெய்வத்தைக்கும்பிடக்
குறித்துக்கொள்வதேன் ஞானப்பெண்ணே.

### ௰௪. சாதிகளையுந் துலுக்கரையுமொத்துப்பார்க்குதல்.

௫௭. ஆடிமாதந் துலுக்கரெல்லாங்
கலியாணஞ் செய்து செழித்திருக்க
ஆடிமாத முனக்குதவாதென
ஆர்சொல்லித்தந்தது ஞானப்பெண்ணே.

௫௮. வேதத்தைக்கேட்டறியாததுலுக்கனிம்
மேரையாக நடந்துகொண்டால்
வேதத்தைக்கேட்ட துடுக்கரெல்லாம்பல
வேஷமெடுப்பதேன் ஞானப்பெண்ணே.

௫௯. துலுக்கனிந்தவிதமாகப் பரஞ்
சோதியாசனத்துக்கு முன்பாய்ப்
பிலிக்கிக்கொள்ளும் பரிசேயர்க்கெதிர்
பேசுவானெடி ஞானப்பெண்ணே.

### ௰௫. சாதிகள் பந்தல் சடங்கு.

௬௰. பந்தல்போடுஞ்சமயத்திலே யவர்
பயந்துநாணிமித்தங் கேட்டு
முந்தினகாலோதியங்காலாய்நட
முறைமையென்பார்கள் ஞானப்பெண்ணே.

௬௧. ஓதியங்காலிற் சந்தனமஞ்சளு
மொக்கத்தடவிக் குழைசூடி
யதிகமாகச் செம்மண்ணும்பூசுவ
தாரென்றுசொல்லடி ஞானப்பெண்ணே

௬௨. அதிசயமென்று கட்டினையோமாரி
யம்மனுக்காமென்று கட்டினையோ
வோதியங்காலில் மாவிலைகட்டின
வுச்சிதமென்னடி ஞானப்பெண்ணே.

௬௩. பருத்திக்கொட்டையும் நெல்லையும்போட்டுப்
பாலையுங் குழியிலூற்றிப்
பொருத்தம்பார்த்து முழுத்தக்கானமே
பொல்லாராரடி ஞானப்பெண்ணே.

௬௪. சாலுங்கரகமும்வைத்ததென்ன வர
சாணியும்வைத்துக்கொண்டதென்ன
மேலும்மஞ்சணீர் நிறைந்தபானையில்
விளக்கெரிந்ததேன் ஞானப்பெண்ணே.

௬௫. குத்துவிளக்கது பத்தாமல் நெற்
குத்துமுலையுந் தூக்கி வைத்துத்
தித்திரிப்பாயதின்மேல்விளக்கேற்றின
திருட்டதேதுக்கு ஞானப்பெண்ணே.

௬௬. திட்டிபட்டுதென்றார்வலத்தன்றைக்குச்
சேர்ந்துபெண்டுகள் நின்றுகொண்டு
வட்டிலில் மஞ்சணீர்கொண்டு சுற்றின
மாயமென்னடி ஞானப்பெண்ணே.

௱௭. வெற்றிலையோடறுகம்பில் பருத்தி
விரையது மஞ்சளுஞ் சுண்ணாம்பு
மொற்றுக்கரைத்துக்கொண் டாலாத்தியெடுத்
தூற்றினதென்னடி ஞானப்பெண்ணே.

௱௮. மஞ்சணீர்தன்னைக் கொண்டுவந்தந்த
மாப்பிள்ளைப்பெண்ணின் றலையைச் சுற்றிக்
கொஞ்சிக்கொஞ்சிக் கீழேயூற்றிலு மங்கவர்
கொடுமைதீருமோ ஞானப்பெண்ணே.

உதயதாரகை—MORNING STAR.

Jaffna, July 11th, 1844.

## ENGLISH AND TAMIL DICTIONARY.

The sheets of this work have been received from Madras, and are now in the hands of the Binder. The work will be ready for delivery to Subscribers by the 28th inst. Subscriptions will continue to be received till the end of July.

Price to Subscribers, in *calf*, 14s. to non-subscribers 15s.
To Subscribers in *sheep*, 12s. to non-subscribers 13s.

Application may be made in Jaffna to the Publisher, Am. Miss. Press, or to any of the Protestant Missionaries; to the Rev. R. S. Hardy, Negombo;—P. B. Fernando and son, Colombo;—Rev. C. Dawson, Kandy;—Rev. G. Hole, Trincomalie;—Rev. P. Batchelor, Negapatam;—Rev. H. Cherry, Madura.

*Payment will be required on delivery of the work.*

Orders from a distance, must be accompanied *with a remittance* or *acceptable* references.

E. S. Minor, *Publisher*.

Jaffna, July 10, 1844.

☞ Circumstances beyond our control have delayed the issue of this No. of the Morning Star.

### Sentiments of Government Officers in relation to Caste.

There is no greater barrier to the improvement of young men in intelligence, civilization and religion, than their pertinacious adherence to caste. It seems, amongst a large portion of the community to be the one of their dearest interests, with which they will part only with their lives. It gives consideration to young men amongst their countrymen; therefore many whose minds have been sufficiently enlightened to perceive the arrogance and folly of the institution and who openly deprecate its observance, for the consideration they hope thereby to maintain amongst their more aristocratic countrymen, will do violence to their own expressed convictions and lend their influence to its support. Such should be reminded, that the Caste party under whose favorable influences they hope to thrive is one that is doomed to extinction. The progress of enlightened sentiments of Government, the growing influence of civilization and religion all bear upon its overthrow. Those whose ambition is directed to places of responsibility and influence under Government, or who are desirous of improvement in the arts of civilized life, will find their caste an awkward and inconvenient appendage which they will sooner or later be glad to part with. And the sooner they part with it the more creditable and advantageous will it be to their characters. For the consideration of this class in particular, we quote the sentiments of several of the chief Government Officers on what they call "this most disgraceful distinction," expressed in the Legislative council on the second reading of the ordinance "for determining the qualifications and making other provisions in respect of persons liable to serve as Jurors and Assessors," as reported in the Colombo Observer.

*The Governor* expressed his regret "that in the nineteenth century, after this Colony had been in the possession of Europeans for such a number of years, the natives should still retain these objectionable prejudices of caste. His Excellency thought that in legislating on so important a matter as this, the Council should not in any way countenance prejudices which were so calculated to retard the improvement of the natives."

The *Government Agent of Colombo* observed "that almost every member of Council was aware of the discussions which took place last year, when he was not present, in regard to the distinctions of caste among the natives of this Island. No one could concur more heartily than he did in the opinion of the Council that those distinctions ought not to be countenanced. Still there was no doubt that some of the highest natives were so blinded and so obstinately attached to the detestable system of caste, that nothing would induce them to submit quietly to being mixed up with people whom they choose to consider to be inferior by nature to themselves. He considered the distinction of caste a most disgraceful distinction."

The *Colonial Secretary* remarked, "it is reasonable to make some allowance for the prejudices of a barbarous country only recently subdued. Such prejudices are natural. We ought therefore to allow them some time. But in the Maritime Provinces those prejudices are utterly inexcusable. Those who uphold them are more barbarous and savage in their ideas, than the Kandians: they have proved themselves inaccessible to the influence of education and civilization. For 300 years they have been under the dominion of Europeans, and still they have shut themselves up to all improvement. In the Kandyan Provinces there are still some people alive who were courtiers to the King of Kandy—a despotic monarch. To them such prejudices would be natural, and some allowance therefore must be made for them."

### ADVANCEMENT OF CEYLON TOWARDS CHRISTIANITY.

The Honorable, the Colonial Secretary, in introducing lately to the first reading in the Legislative Council, "an Ordinance to promote the building of places of Christian worship, and to provide for the maintenance of ministers of the Christian religion" offered the following remarks, on the character and spirit of the Ordinance, and the improved circumstances of Ceylon in respect to the reception of Christianity.

"For myself, I have to say, that the duty which I have now to perform is one which gives me the greatest satisfaction, for I feel persuaded that the measure which is now brought under your consideration will hereafter be viewed as presenting a new and an important feature in the legislation of the east: because this is not an Ordinance merely providing for the toleration of the Christian religion, or for permitting the erection of Christian places of worship, but it is for placing Christian instruction within the reach of every inhabitant of this colony. It declares Ceylon for the first time to be a Christian Colony. It has hitherto been in fact a heathen country. It has been the good fortune of Ceylon from its position and local circumstances to lead the way in the east of introducing European civilization and European Institutions. It is not for me to say to what extent we have gone in this march of improvement. But in this instance at least, Ceylon is far a head of India; and I and many others who have the advancement of religion sincerely at heart will hail with joy the day when a similar Ordinance shall be introduced in that country. Surely it will be admitted that the Ordinance now brought before us is founded upon the soundest principles of toleration and Christian charity to all men. It is in my opinion an essential point, in all our endeavours to convert the heathen around us, to smooth away those differences of sects, those virulent hatreds among brethren which have been a disgrace to Christianity. We ought as far as we can, to suppress all such differences; for the effects of such rivalry as existed formerly, and which I am happy to say is now so fast subsiding would be to neutralize our efforts to convert the heathen, by creating doubts in their minds as to the truth of our profession of Christianity; for when they see Christians so hating each other, they must doubt whether they are in earnest in their profession of a faith with which it is so consistent. In a political view it is declared that all the inhabitants of Ceylon without reference to caste or colour are British subjects and equally entitled to British freedom and protection. In the same way in regard to Christianity let us prove to the heathen that all Christians are brethren whatever shades of differences may exist amongst persons of various denominations and equally entitled to aid in the promotion of Christian education."

### OBLIGATIONS OF THE MISSIONARY ENTERPRISE.

In the Christian scheme the following facts are essential:—that mankind are in a state of sin, and dying in this state are utterly lost; that their recovery can be effected only by their being christianized, or brought under the power of the gospel; that the gospel can do nothing where it has not been propagated, or is unknown; that Christian missions are the necessary means of its propagation, and that under the divine blessing, these means are adequate, and their end certain. These facts which are, we may say, the ground-work of missions, their plea, their justification, their praise, are also an argument which no one can answer, for their most thorough and vigorous prosecution. They make an appeal to the hearts of Christians, which, if it was justly responded to, would at once constitute the universal church a missionary Society, and would keep missions advancing with increasing speed and power, until no man would be left beneath the wide vault of heaven without the knowledge of the gospel. These great primary truths of Christianity render all degrees of missionary apathy in the Church her unspeakable dishonour and reproach, implying unparalleled hardness of heart, if not downright insincerity in her confession of Christ. It is propounded therefore, as a matter self-evident and unquestionable, that Christianity should either be renounced as an imposture, or else be propagated through the world with all possible diligence; that there is no middle way, which reason does not instantly repudiate, between denying the gospel altogether and going forward with the work of spreading it among the natives of the earth, until the universal human race is brought under its influence.—*Dr. Skinner, before the American Board of Commissioners for Foreign Missions.*

## INTERESTING CONVERSION AT LYONS, FRANCE.

The following interesting circumstances afford a striking illustration of the miserable and soul destroying expedients, which are substituted in the place of the Gospel, to quiet the alarmed consciences of awakened sinners, by some Roman Catholics, and of the efficacy of the pure Gospel, for the same object. It seems as if the Gospel was indeed hid to those who are under purely Roman Catholic influences. How awful is the responsibility of those heads of the church who authorise and countenance such unscriptural means of salvation.

Mrs.——'s conscience had become alarmed and she applied for spiritual comfort to several nuns and priests of the parish. Various specifics were prescribed but with no good effect, the patient continued suffering. A superior remedy was at last restored to—what is here regarded as a kind of *Summum Bonum*, a pilgrimage to the virgin Mary's Chapel, *Notre Dame Fourviere*. To this chapel, which stands on the top of one of the romantic hills that abruptly rise from the western, bank of the river Seine, this distressed sinner was exhorted to re pair *nine* times. *Nine* successive mornings, therefore, was the poor female to be seen, resorting to the sacred hill, as the sun gilded its summit with its earliest rays. *Nine times* did she enter within the walls of the sanctuary and move forward with a slow and solemn step to the altar, on which the sacred-candles were burning. Innumerable are the testimonials, presented by the chapter of this chapel in confirmation of the wonderful deliverances, cures and miracles that were wrought, not by the grace & power of God-but by the *mother of God*, for those who present their offerings at her altar. Here Mrs. — performed her devotions and laid her offerings on the shrine of the blessed Virgin. Wax candles were presented, a sacred image was added, but all proved ineffectual. Conviction of sin and remorse remained, and the sin-smitten soul can find no peace. Seeing her remain comfortless, some Roman catholic friends presented her with some pictures, among which was one that was intended to represent the *Holy Ghost!* But these fresh *messengers of superstition* instead of speaking peace to her heart, threw her into a state of mind which brought on a bodily disease. With a sick body and a disconsolate soul, her misery seemed to have reached its climax. But this was the Lord's time. He directed one of his servants to knock at the door of this sufferer, and with the Bible in his hand and the love of souls in his heart, to point out to the burthened sinner the *"Lamb of God that taketh away the sin of the world."* And now was effected by the blessing of God on the humble means, what numerous ceremonies, offerings and pilgrimages were unable to accomplish. She looked by faith on the Lord Jesus Christ, as her *great and only* Saviour, and her burthened conscience was relieved, and her spirit was made calm and happy in his love. She now read her Bible, recovered her health, became an attendant at the Evangelical Chapel, was received to the Lord's table and continues to lead a consistent and edifying course of life.—*Correspondent of an American paper in France.*

---

## ஓர் திருட்டாந்தம்.

அன்பதுவிதமான பாஷைகளுக்கதிகமான பாஷைகளில் மகா நிபுணனாய் இருந்த ஒரு கொல்லன் சொல்வதென்னவெனில்—நானொரு வர்த்தகனிடமிருந்து வேலை பழகி வருங் காலத்திற் சகல விதமான புத்தகங்களையுமோடாடியறியவேண்டுமென்ற தீர்மானத்தைக்கொண்டதினால்; நான் எப்பொழுதும் வாடிக்கையாய்ச் செய்யும் வேலையிலும் மேன் மிச்சமாய் வேலை செய்து அத்தால்நாளொன்றுக்கு எட்டுப்பணமுளைத்துச் சட்டைச் சாக்கிலே போட்டுக்கொண்டு இரவிலே பதினைந்து மயில் தூரத்துக்குப் போய் இலத்தீன் பாஷையில் எழுதப்பட்ட ஓரிலக்கணப்பிரதியை விலைகொடுத்து வாங்கிக்கொண்டு பிறகுந் திரும்பிப் பதினைந்து மயிலுக்கு நடந்து மற்ற நாட் காலமே எனது பணிவிடையைச் செய்யத் தொடங்கும நேரத்திலே வந்துவிட்டேன்.

## யாழ்ப்பாணம்.

மேலான சங்கைபொருந்திய சுப்பிறீங்கோட்டுக்குப் பாரப்படுத்திவைத்த வழக்குகளை விளங்கும்பொருட்டுக் கனம்பொருந்திய அந்தோனி ஒலிபந்து (Sir Anthony Oliphant) என்னும் முதலாம் நீதிபதியவர்கள் முகதாவில் இந்த மீ ௰௩ தீ புதன்கிழமைசுப்பிறீங்கோடுகூடப்படும். மேற்சொல்லப்பட்ட உத்தியோகஸ்தர்கள் (Seaforth) புகைக்கப்பலிலேறி வருகிறார்கள். யாழ்ப்பாணத்திலிதற்குமுன் புகைக்கப்பலெப்போவாகுதல் வந்துபோனதோ தெரியாது. இப்புகைக்கப்பல இந்த மீ ௰௩ தீ திங்கட்கிழமை காலமே (அ) மணிபோலப் பாசையூரில் வந்துபொறுத்துக்கொஞ்சநேரம் மாத்திரம் நின்று திரும்பவுமுடனே போய்விடும். அத்தைப் பார்க்கப் பிரியமுள்ளவர்கள் சீக்கிரம்போய்ப் பாசையூரிற் பார்க்கவும்.

---

**அமேரிக்கன் மிசியோனைச் சார்ந்த கனம்போருந்திய சோட்சு என்றிறி அப்தோப்பு என்னும் போதகர் மரணமடையச்சிறிது நாளைக்கு முன்னே சொல்லியிருந்த வார்த்தைகளைப் பற்றி அவருடைய மனைவி எழுதிச் சுற்றத்தார் முதலியோர்க்கனுப்பின காகிதத்திலிருந்து சுருக்கி எழுதப்பட்டது.**

